# ஆடம்பரமான இரண்டு குடியிருப்பு திட்டங்களுடன் சென்னையில் ஷோபா டெவலப்பர்ஸ்

இந்தியாவின் முன்னணி ரியல் எஸ்டேட் நிறுவனங்களில் ஒன்றாகவும், டெலிவரி மற்றும் சிறப்பான வாடிக்கையாளர் சேவை ஆகியவற்றுக்காக அறியப்பட்ட நிறுவனமாகவும் திகழும் ஷோபா டெவலப்பரஸ் லிமிடெட், சென்னையில் தனது முதலாவது திட்டங்கள்



தொடங்கப்படுவதை அறிவித்துள்ளது. பழைய மகாபலிபுரம் சாலையில் (ஓஎம்ஆர்) உள்ள கேளம்பாக்கத்தில் 'ஷோபா மெரிட்டா' மற்றும் போரூர் அருகே சென்னீர்குப்பத்தில் 'ஷோபா செரீன்' ஆகிய திட்டங்கலை அந்த நிறுவனம் தொடங்குகிறது.

'ஷோபா மெரிட்டா' மற்றும் 'ஷோபா செரீன்' ஆகிய இரண்டு திட்டங்களும் சென்னையில் உலகத் தரம் வாய்ந்த வீடுகளை தேவைகளை ஞீர்த்தி செய்வதாக இருக்கும். இவை ஷோபாவின் உலகளாவிய மற்றும் உள்ளூர் திட்டங்களின் மூலம் கிடைத்த கட்டிட வடிவமைப்பு ஆதரவுடன் ஒப்பிட்டுப் பார்க்க முடியாத தரம் கொண்டவையாக இருக்கும். இது குறித்து அதன் இயக்குனர் ஜே.சி. சர்மா கூறுகையில், ஈஷோபா மெரிட்டா மற்றும் ஷோபா செரீனஅ திட்டங்களின் மூலம் சென்னை ரியல் எஸ்டேட் சந்தையில் நுழைவது எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. ஆடம்பர வீடுகளுக்கான தேவை தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையில் ஷோபா மெரிட்டா மற்றும் ஷோபா செரீன் ஆகியவை சென்னையில் உள்ள ஆடம்பரமான மற்றும் சிரமமற்ற வீடுகளை தேடுவோரின் தேவைகளை ஞீர்த்தி செய்யுமா அனைத்து வசதிகளையும் இது உள்ளடக்கியதாக இருக்கும் என்றார்.